# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சே. அப்பர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 0081/2017/ந

ஆணை எண்: 127/2017

நாள்: 20/05/2017

திரு. K.M. இராமசாமி,
எண்.89/39, அமரா தெரு,
கரூர் - 639 001. — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி. — எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 11.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 13.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண்.0081/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் துப்புரவு அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அவர் தனக்கு சிவகங்கை நகராட்சியில் தனது ஓய்வூதியம் மறு நிர்ணயம் செய்யப்படாமல் 2 வருடங்களாக நிலுவையில் உள்ளதென புகார் தெரிவித்துள்ளார்.

இப்பொருள் குறித்து உடனடி நடவடிக்கை எடுத்து விவர அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு சிவகங்கை நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (எண்.0081/2017/ந நாள்:19.04.2017) அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிவகங்கை நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.794/2017/எச்2 நாள்:28.04.2017ல், மனுதாரரது திருத்திய ஓய்வூதிய கருத்துரு

(ந.க.எண்.2725/2016/சி, நாள்:24.04.17) உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டமை குறித்தான பதிலறிக்கை வரப்பெற்றது.

இதனிடையே இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை முறையீட்டு மனு எண்.0031/17/ந நாள்: 25.04.2017ன்படி முறையீட்டு மனுதாரர் 06.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு வந்து விளக்கமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தனது 04.05.2017 நாளிட்ட கடிதத்தில் "தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மேற்கொண்ட நடவடிக்கையால் தனது ஓய்வூதிய மறு நிர்ணய கருத்துரு சிவகங்கை நகராட்சி ஆணையர் அவர்களால், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர் அவர்களுக்கு தாமதிக்காமல் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டதெனவும், தனது புகார் மீது வேறு முறையீடு ஏதுமில்லை எனத் தெரிவித்து தனது முறையீட்டினை திரும்பப் பெற அனுமதிக்குமாறும் விசாரணையிலிருந்து விலக்களிக்கவும் கோரியுள்ளார்.

இந்நிலையில் மனுதாரரது முறையீடு நிறைவடைந்ததால் மேற்படி வேண்டுகோள் இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டு முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மே திங்கள் 20–ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒப்பம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு. K.M. இராமசுவாமி,
   துப்புரவு அலுவலர் (ஓ)
   எண்.89/39, அமராவதி தெரு,
   கரூர் - 639 001.

2. நகராட்சி ஆணையர்,
   சிவகங்கை நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம்.